சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கூட்டுறவுத் தணிக்கைத் துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு.சி.ஜோதிமுத்து, முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பணியிடை இறப்பு - அவரது வாரிசான மகன் திரு.ஜோ.மகேஷ்வரன் என்பவருக்கு 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் - பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்.442

நாள்:05.12.2020,
சார்வரி, கார்த்திகை -20,
திருவள்ளுவர் ஆண்டு - 2051.

படிக்கப்பட்டது:

1. தஞ்சாவூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.1242/2008/ப.தொ, நாள் 26.06.2008.
2. அரசாணை(நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்(எம்) துறை நாள் 01.08.2018.
3. தனியரின் விண்ணப்ப நாள்.31.08.2008.
4. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணை, ந.க.எண்.6919/2018/அபஅ.3, நாள்.03.10.2019.
5. அரசாணை(நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(க்யூ-1) துறை, நாள்.23.01.2020.
6. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கடித ந.க.எண்.6919/2018/அபஅ.3, நாள்.29.07.2020 மற்றும் 12.11.2020.

* * * * *

ஆணை:-

கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளராகப் பணிபுரிந்து வந்தபோது

பணிக்காலத்தில் 28.04.2005 அன்று இயற்கை எய்திய, (திரு).சி.ஜோதிமுத்து, என்பவரின் வாரிசான திரு.ஜோ.மகேஷ்வரன் என்பவருக்கு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி, கருணை அடிப்படையில், தஞ்சாவூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 09.10.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், எனவே, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. திரு.ஜோ.மகேஷ்வரன் 09.02.1990 அன்று பிறந்துள்ளார். தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். மேலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான அனைத்து விதிகள்/ நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார்.

3 அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தஞ்சாவூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ஜோ.மகேஷ்வரன் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இதனால் எழக்கூடிய நிலுவைப் பணப்பயன்களை பெறத் தனியர் தகுதியுடையவர் ஆகிறார். தனியர், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பதை உறுதிசெய்யுமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.19394/க்யூ-1/2020-2, நாள்:02.12.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.32368/ஜி-2/2020-1, நாள்.04.12.2020-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர் :
கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை-35.
(அனைத்து அசல் சான்றிதழ்களுடன்)
திரு.ஜோ.மகேஷ்வரன், இளநிலை உதவியாளர் (இயக்குநர் மூலமாக)

நகல் :
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (க்யூ-1)த் துறை, சென்னை-09
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்த (ஜி-2)த் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

//பதிவஞ்சல் மூலம்//

கூட்டுறவு தணிக்கை இயக்ககம்,
சென்னை-35.

மே.எ.ந.க. 6919/2018/அபஅ3

நாள்: 15.12.2020

//தொடர்புறுத்தப்படுகிறது//

ஒம்/- க.மணிவாசகன்
இயக்குநர்

//ஆணைப்படி//

இயக்குநருக்காக

பெறுநர்:
திரு. கோ. மகேஸ்வரன், இளநிலை உதவியாளர்.
(கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், தஞ்சாவூர் (மேற்கு)).

நகல் :
1. கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், தஞ்சாவூர். (இவ்வாணையை தனியருக்கு வழங்கி, அதன் ஒப்புதலை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது)
2. இயக்ககம் அபஅ2 பிரிவு,
3. இருப்புக்கோப்பு அபஅ3 பிரிவு.

கூட்டுறவு தணிக்கை உதவி
இயக்குநர் அலுவலகம்
தஞ்சாவூர்

மொ.மு.ந.க. 862/2020/ப.மதர　　　　நாள்: 4.12.2020

'அனுப்பப்படுகிறது'

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
தஞ்சாவூர்.

பெறுநர்:
திரு. கோ. மகேஸ்வரன், தி.உ
அலுவலகம்.

[illegible]!